**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி</u>**
**<u>முன்னிலை திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,</u>**
**<u>நீதித்துறை நடுவர், பழனி</u>**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 8ம் நாள்**
**2026ம் வருடம் ஜூன் திங்கள் 22ம் நாள் திங்கட்கிழமை**

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.145/2022</u>

அரசுக்காக – காவல் சார்பு ஆய்வாளர்,
பழனி தாலுகா கா.நி.கு.எண்.768/2021 ... **குற்றமுறையீட்டாளர்**

/எதிர்/

1. பாரதி, 26/2021
த/பெ.பரமன்,
374, 2வது வார்டு,
அழகுநாச்சியம்மன் கோவில் தெரு, அழகாபுரி,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

2. மருதை, 24/2021
த/பெ.பரமன்,
323, மேற்கு தெரு, அ.கலையம்புதூர்,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

3. சதீஸ்குமார், 19/2021
த/பெ.கருப்புச்சாமி,
3/3, மேற்கு தெரு, அ.கலையம்புதூர்,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

4. மணிகண்டன், 21/2021
த/பெ.கருப்புச்சாமி,
3/3, மேற்கு தெரு, அ.கலையம்புதூர்,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம். ... **எதிரிகள்**

இவ்வழக்கு 02.09.2022 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>தீர்ப்புரை</u>**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு** –

இவ்வழக்கின் வாதி கடந்த 29.09.2021ம் தேதி 22.00 மணியளவில் தன் அப்பாவிற்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தபோது அங்கு நின்றிருந்த எதிரிகள் நால்வரும் வாதியை ஏண்டா தேவுடியா அவுசாரி மகனே எங்களை எதிர்த்தாடா பேசுற என்று அசிங்கமாக பேசி, 3, 4 எதிரிகள் கல்லால் வாதியின் இடது வலது காது அருகே குத்தி, 1,2 எதிரிகள் இருவரும் வாதியை கையால் அடித்து கீழே தள்ளி மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி, எங்களை எதிர்த்தா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, 1, 2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், 3, 4 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக 1 முதல் 4 எதிரிகள் மீது பழனி தாலுகா காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், 3, 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, குற்றச்சாட்டுக்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

திரு.முரளி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 30.09.2021ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சண்முகவேல் என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.768/2021 பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.ச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்து, சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் அஜித்குமார், தங்கபாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வைமகஜர் தயார் செய்து அ.சா.ஆ.4 மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரி பாரதி என்பவரை 01.10.2021ம் தேதி 9.00 மணிக்கு அழகாபுரி அழகுநாச்சியம்மன்கோவில் அருகே கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் எதிரிகள் மருதை, சதீஸ் குமார், மணிகண்டன் ஆகியோர்களை தேடி வந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாகி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை. பின்னர் காயம்பட்ட சண்முகவேல் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முருகேஷ்குமார் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்து, பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்து, பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.ச கீழ் 30.11.2021ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை 1 முதல் 4 எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ்

வினவிய போது எதிரிகள் பொய்சாட்சி என்று கூறினார்கள். 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, 1 முதல் 4 எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், 3, 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரிகள் நால்வரும் வாதியை அசிங்கமாக பேசி, 3, 4 எதிரிகள் கல்லால் வாதியின் இடது வலது காது அருகே குத்தி, 1, 2 எதிரிகள் இருவரும் வாதியை கையால் அடித்து கீழே தள்ளி மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த செயலானது அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரிகள் நால்வரும் வாதியை அசிங்கமாக பேசி, 3, 4 எதிரிகள் கல்லால் வாதியின் இடது வலது காது அருகே குத்தி, 1, 2 எதிரிகள் இருவரும் வாதியை கையால் அடித்து கீழே தள்ளி மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த செயலானது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிரானக் குற்றச்சாட்டுக்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து 1 முதல் 4 எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. தீர்வு –

இவ்வழக்கின் வாதி கடந்த 29.09.2021ம் தேதி 22.00 மணியளவில் தன் அப்பாவிற்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தபோது அங்கு நின்றிருந்த எதிரிகள் நால்வரும் வாதியை ஏண்டா தேவுடியா அவுசாரி மகனே எங்களை எதிர்த்தாடா பேசுற என்று அசிங்கமாக பேசி, 3, 4 எதிரிகள் கல்லால் வாதியின் இடது வலது காது அருகே குத்தி, 1,2 எதிரிகள் இருவரும் வாதியை கையால் அடித்து கீழே தள்ளி மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி, எங்களை எதிர்த்தா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, 1 முதல் 4 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் வாக்குமூலம் கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு தான் வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே சென்றபோது அடையாளம் தெரியாத 10–15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்ததாகவும், தான் சண்டையை விலக்கிவிட சென்றபோது தனக்கு காது, கை, கால்களில் காயம் ஏற்பட்டதாகவும், யார் தன்னை அடித்தார்கள் என தனக்கு தெரியவில்லை என்றும், பின்னர் தான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், தான் சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே அ.சா.1 சென்றபோது அடையாளம் தெரியாத 10–15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தார்கள் என கேள்விபட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

12. இந்த வழக்கில், அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 அரசு

தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.6ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து 1 முதல் 4 எதிரிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டார்கள் என்றோ அல்லது 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், 3, 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டுக்கள் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1 முதல் 4 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என்று கண்டறிகிறது.

14. முடிவில், 1, 2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், 3, 4 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 1 முதல் 4 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

<u>15. வழக்குச் சொத்து</u> –

இந்த வழக்கில் வழக்குச்சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜுன் திங்கள் 22ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:41:49 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

<u>அரசு தரப்பு சாட்சிகள் –</u>

| | |
|---|---|
| அ.சா.1 | சண்முகவேல் |
| அ.சா.2 | ஆண்டி |

| | |
|---|---|
| அ.சா.3 | பேச்சியம்மாள் |
| அ.சா.4 | அஜித்குமார் |
| அ.சா.5 | முத்துக்கருப்பன் |
| அ.சா.6 | வேலுமணி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலம் | 30.09.2021 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜர் | 30.09.2021 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3 | முதல் தகவலறிக்கை | 30.09.2021 | அ.சா.ஆ.3 | அ.சா.6 | அசல் |
| 4 | மாதிரி வரைபடம் | 30.09.2021 | அ.சா.ஆ.4 | அ.சா.6 | அசல் |
| 5 | விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று | 29.09.2021 | அ.சா.ஆ.5 | அ.சா.6 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** – இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள்** – இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:41:54 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**குறிப்பு :–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Palani

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 22.06.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commencement of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 29.09.2021 | 30.09.2021 | A1 on 06.10.2021 | A1 on 08.10.2021 Anticipatory bail A2 to A4 on 26.10.2021 | 18.12.2023 | 19.06.2026 | 22.06.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | 30.09.2021<br><br>30.11.2021<br>08.07.2022<br>02.09.2022 | Complainant side evidence till 19.06.2026 |

Judgment in CC 145/2022 on the file of the Judicial Magistrate of Palani.

Complainant: The Sub-Inspector of Police, Taluk P.S in Cr.No.768/2021

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Bharathi | 26/2021 | S/o.Paraman |
| Maruthai | 24/2021 | S/o.Paraman |
| Sathishkumar | 19/2021 | S/o.Karuppusamy |
| Manikandan | 21/2021 | S/o.Karuppusamy |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Azhagapuri | Palani |
| Hindu | -- | A.Kalayamputhur | Palani |
| Hindu | -- | A.Kalayamputhur | Palani |
| Hindu | -- | A.Kalayamputhur | Palani |

Offence : U/s 294(b), 323, 324, 506(2) IPC

Framing of Charges : A1, A2 were found not guilty from the charges U/s. 294(b), 323, 506(2) IPC and A3, A4 were found not guilty from the charges U/s. 294(b), 324, 506(2) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:41:59 +0530

**Judicial Magistrate,**

**Palani.**

Judicial Form No.61

(See Rule 106)

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, PALANI

JUDGMENT IN CC 145 OF 2022

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI

Complainant : Sub-Inspector of Police, Palani Taluk PS.

Accused : 1) Barathi and 3 others

Offence : Section 294(b), 323, 324, 506(2) IPC

**Finding** : A1 to A4 were found not guilty

**Sentence** : A1, A2 were found not guilty from the charges U/s. 294(b), 323, 506(2) IPC and A3, A4 were found not guilty from the charges U/s. 294(b), 324, 506(2) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

**Property** : NIL

| Sl. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Bharathi | S/o.Paraman | Hindu | - | Palani | 26/2021 |
| 2 | Maruthai | S/o.Paraman | Hindu | - | Palani | 24/2021 |
| 3 | Sathishkumar | S/o.Karuppusamy | Hindu | - | Palani | 19/2021 |
| 4 | Manikandan | S/o.Karuppusamy | Hindu | - | Palani | 21/2021 |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commence ment of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 29.09.2021 | 30.09.2021 | A1 on 06.10.2021 | A1 on 08.10.2021 Anticipatory bail A2 to A4 on 26.10.2021 | 18.12.2023 | 19.06.2026 | 22.06.2026 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Complainant side evidence till 19.06.2026 |

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.06.22 17:42:05 +0530

**Judicial Magistrate,**

**Palani.**

## Case Summary in CC 145/2022

<table>
<tr><th>S. No</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1</td><td>The Period of Remand of the Accused/Surrender</td><td>A1 on 06.10.2021</td></tr>
<tr><td>2</td><td>Date of filing of the Complaint/Final Report in the Court</td><td>30.11.2021</td></tr>
<tr><td></td><td>The date of Commital of the Case to the court of session</td><td>Not applicable</td></tr>
<tr><td>4</td><td>First Questioning u/s 240 of crpc</td><td>18.12.2023</td></tr>
<tr><td>5</td><td>Filling of Miscellaneous petition and result</td><td>Nil</td></tr>
<tr><td>6</td><td>Date of Examination in chief and Cross examination of witness.</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>PW2</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>PW3</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>PW4</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>PW5</td><td>18.06.2026</td><td>18.06.2026</td></tr>
<tr><td>PW6</td><td>18.06.2026</td><td>18.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7</td><td>NBW Issued date</td><td>NIL</td></tr>
<tr><td>8</td><td>NBW recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Questionings u/s 313(i)(b) of Cr.P.C.</td><td>19.06.2026</td></tr>
<tr><td>10</td><td>Details of Abscondence of an accused and his appearance/production</td><td>NIL</td></tr>
<tr><td>11</td><td>Grant of stay by superior courts and the results there of</td><td>NIL</td></tr>
</table>

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:42:10 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.145/2022**
**Date : 22.06.2026**

A1 to A4 Present. Judgment pronounced in Open Court.

A1, A2 were found not guilty from the charges U/s. 294(b), 323, 506(2) IPC and A3, A4 were found not guilty from the charges U/s.294(b), 324, 506(2) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.22 17:42:15 +0530

**Judicial Magistrate,**
**Palani.**